# டாப்லைட் நாச்சிமுத்து நினைவு நூலகம்

## 75ஆம் படிப்போம் பகிர்வோம் அமர்வு

திருப்பூர் மக்களுக்கு வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக டாப்லைட் நிறுவனத்தினர் தங்கள் பூர்வீக இடமான குன்னாங்கல் பாளையத்தில் அமைந்துள்ள 2000 சதுரடி இடத்தை நூலகமாக அமைத்துள்ளனர்.

அதன் பயனாக வாசகர்கள் வருகை அதிகரித்து வருகிறது. அவர்களை வாசிக்க ஊக்கப்படுத்தும் விதமாகவும் வாசித்த தங்கள் நூல்களின் அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் விதமாகவும் மாதந்தோறும் “படிப்போம் பகிர்வோம்“ என்கிற அமர்வினை பிரதி மாதம் கடைசி ஞாயிறு மாலை 4 மணி முதல் 6 மணிவரை நடத்துகின்றனர்.

இப்படியான தொடர் நிகழ்வின் 25ஆவது மாத அமர்வின் சிறப்பினைக் கொண்டாடும் விதத்தில் விழாவாக நடத்தி வருகின்றனர். அந்த அமர்வில் கல்வியாளர் ஜெகத்கஸ்பர் அவர்களை வரவழைத்து சிறப்புரையும், வழக்கமான படிப்போம் பகிர்வோம் அமர்வினை பார்வையாளர்கள் மத்தியில் நடத்தியும், கவிஞர். முத்துபாரதி அவர்களின் “நூலகம் எனும் நண்பன்“ நூல் வெளியீடும் சிறப்பாக நடைபெற்றது.

பின்னர் 50ஆம் மாத சிறப்பு அமர்வினைக் கொண்டாடும் விதத்தில் ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் தோழர் ஸ்டாலின் குணசேகரன் அவர்களை அழைத்து பல்லடம் சாலை இராமசாமி முத்தம்மாள் திருமண மண்டபத்தில் படக்கண்காட்சி, நூல்கள் விற்பனை அரங்கு எனவும்,

கவிஞர். முத்துபாரதியின் “அகதி“ நாவல் வெளியீடும், டாப்லைட் வாசகர் கிராம நிர்வாக அலுவலர் திரு. ஜெ. சுந்தரபாண்டியன் அவர்கள் எழுதிய “தமிழில் இவ்வளவு இருக்கா?“ என்கிற நூலும், டாப்லைட் நூலக ஒருங்கிணைப்பாளர் திரு. மணிநாதன் அவர்களின் “கூட்டாஞ்சோறு“ என்கிற சிந்தனைத் தொகுப்பும் வெளியிடப்பட்டது.

இந்த வரிசையில் 75ஆம் நிகழ்வு டிசம்பர் 29, 2024 ஞாயிறு அன்று சிறப்பாக நடத்தத் திட்டமிடப்பட்டது. அதற்காக டாப்லைட் வாசகர்களை தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லலாம் என தீர்மானிக்கப்பட்டு அதை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு கீழடி அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் சென்றது போல இவ்வாண்டு “கங்கை கொண்ட சோழபுரம்“ அழைத்துச் செல்ல முடிவானது.

இதற்காக பலநாட்களாகத் திட்டமிடல், ஒருங்கிணைப்பு, வாசகர்கள் வருகைப்பதிவு, பேருந்து ஏற்பாடு,உணவு ஏற்பாடு ஆகியவை குறித்த ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் பலமுறை நடத்தப்பட்டது.

29-12-2024 அன்று ஞாயிறு காலை டாப்லைட் நிறுவனத்தின் நாச்சிமுத்து நினைவு நூலகத்தில் இருந்து ஐந்து பேருந்துகளில் ஏறக்குறைய 320 வாசகர்கள் தமிழகத்தின் பழம்பெருமைகளில் ஒன்றாக “கங்கை கொண்ட சோழபுரம்“ அழைத்துச் செல்லப்பட்டனர்.

அனைத்து பேருந்துகளிலும் குடிநீர், முதலுதவிப் பெட்டி, வாசகர்களுக்கான ஸ்னாக்ஸ், பாடல்கள் ஒலிபரப்பும் வசதி என ஏற்பாடு செய்யப்பட்டது. பயணம் பாதுகாப்பாக அமைய அருட்காப்பு, சங்கல்பம் செய்து, கோளறுபதிகம் பாடி ஒவ்வொரு பேருந்தும் வரிசையாகப் புறப்பட்டது.

இம்முறை அரசு போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தி சிறப்பாக வாசகர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அரசு பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள் தங்கள் சிறப்பான அனுபவத்தின் காரணமாக பாதுகாப்பாக வாசகர்களை அழைத்துச் சென்றது பாராட்டுதலுக்குரியது.

29-12-2024 ஞாயிறு காலை 4.30 மணிக்கு வாசகர்கள் அனைவரும் வந்து சேர்ந்தனர். சுற்றுலா புறப்பாடு நிகழ்ச்சியை கவிஞர். முத்துபாரதி அவர்கள் வரவேற்று, கொடியசைத்துத் துவங்கிவைக்க வருகை தந்த கிட்ஸ் பள்ளி குழுமங்களின் தாளாளர் திரு. மோகன் கார்த்திக் அவர்களை வாழ்த்துரை வழங்கி தொடங்கி வைக்கக் கேட்டுக் கொண்டார். சிறப்பான பயணமாக அமைய வாழ்த்தி கொடியசைத்து பயணத்தைத் தொடங்கி வைத்தார். முன்னதாக பயணத்தின்போது சென்று பார்க்கும் இடங்களான கங்கைகொண்ட சோழபுரம், உடையார் பாளையம் அரண்மனை, அருங்காட்சியகம் ஆகிய குறித்து திரு. கோபால்சாமி, திரு. ஈஸ்வரன், திருமதி. கௌசல்யா வேலுச்சாமி, ஆசிரியர் திரு. தங்கவேல் ஆகியோர் வாசகர்களிடம் சிறப்பாகத் தெரிவித்தனர்.

தொடங்கி வைத்து சிறப்பு விருந்தினர் திரு. மோகன் கார்த்திக் அவர்களுக்கு நூலகம் சார்பாக நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.



காலை 5 மணி அளவில் பயணம் சிறப்பாகத் தொடங்கியது.

ஒவ்வொரு பேருந்திலும் தனித்தனியாக அருட்காப்பு சங்கல்பம் செய்தும், கோளறுபதிகம் பாடியும் வாசகர்கள் தங்கள் பாதுகாப்பான பயணத்திற்கு அடித்தளம் அமைத்தனர்.

பின்னர் பரஸ்பர அறிமுகம் செய்தபின் அவரவர்களுக்குப் பிடித்த பாடல்களை கேட்டுக் கொண்டு வந்தனர். சிறுவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டும்,

சிலர் அதிகாலை வந்ததின் காரணமாக தூங்கிக் கொண்டும் வந்தனர். சிலர் தாங்கள் ஏற்கனவே சென்று வந்த பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அதிகாலை 4 மணிக்கே வந்துவிட்டாலும் பலருடன் குதூகலத்துடன் சுற்றுலா செல்வதால் சிலர் தூங்கும் எண்ணமே வரவில்லை என ஜாலியாக பாட்டுகள் கேட்டுக் கொண்டும் உடன் பாடிக்கொண்டும் வந்தனர்.

செல்லும் வழியில் குளித்தலை அருகே கடம்பர் கோயில் துறை என்கிற இடத்தில் காவிரி ஆற்றின் கரையோரம், காலை உணவு 8.30 மணி அளவில் அனைவருக்கும் வழங்கப்பட்டது.



பின்னர் 11.30 மணி அளவில் பெரம்பலூர் அருகே டோல்கேட் அருகிலுள்ள ஓய்வறையை பயன்படுத்திய பின் அருகிலுள்ள புதிதாக அமைக்கப்பட்ட தேநீரகத்தில் அனைவருக்கும் தேநீர் இடைவேளையில் பிஸ்கட், தேநீர், தேன்மிட்டாய் போன்ற ஸ்னாக்ஸ் வழங்கப்பட்டது.

பகல் 1 மணி அளவில் உடையாளர்பாளையம் சென்றடைந்தோம். பழமையான ஊராக இருந்தாலும் அங்கங்கே நவீன மாற்றங்களைக் கொண்டதாகவும் இருந்தது. உடையார்பாளையம் ஜமீன் ராஜ்குமார் பழனியப்பன் அவர்களுடன் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. அவர் வாசகர்கள் அனைவரையும் வரவேற்று உடையாளர்பாளையம் ஜமீன் குறித்தும் இந்த ஆயிரம் ஆண்டு கால வரலாற்றுப் பின்னணி குறித்தும் விரிவாகப் பேசினார். அவருக்கு டாப்லைட் நாச்சிமுத்து நினைவு நூலகம் சார்பாக நூல்கள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

உடையார்பாளைய அரண்மனை என்பது ஜமீன் பரம்பரையினர் வாழ்ந்த இடமாகக் கருதப்படுகிறது. ஆனால் தற்போது மிகவும் சிதைந்த நிலையில் யாரும் வசிக்க இயலாத நிலை மட்டுமல்ல, சுற்றுலாப் பயணிகள் வந்து பார்க்க இயலாத நிலையிலும் உள்ளது. ஜமீன் வசிப்பிடம் எதிரே அமைந்துள்ள பிரம்மாண்ட கோபுரம் கொண்ட ஈஸ்வரன் கோயில் மற்றும் அதன் முன்பாக அமைந்துள்ள காண்டீப குளம் மிக ஆழமான ஒன்றாக அமைந்துள்ளது.

மேலும் அங்கே வில் வளைத்த விநாயகர் என்னும் சிறப்பு கொண்ட கோயிலும் அமைந்துள்ளது.

காண்டீப குளம் என்கிற பெயர், இராமாயண காலத்தில் ராமர் தனது காண்டீப வில் அம்பை அதன் தீவிரத்தைத் தணிக்க

அந்தக் குளம் இருக்குமிடத்தில் குத்தியதாக வரலாறு என்று தெரிவித்தார். 14 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள அந்த இடத்தில் தற்போது புணரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





பின்னர் அனைவருக்கும் கோயில் வளாகத்தில் 2 மணி அளவில் உணவருந்த ஏற்பாடு செய்யப்பட்டது. காலையிலிருந்து வாட்டிய வெயில் தணியும்படி பின்னர் லேசான மழைத்தூரல் வந்து அனைவர் மனதையும் குளிரச் செய்தது. லேசான மழைத்தூரல் இடையே கோயிலில் இருந்து 500 மீட்டர் தூரத்தில்

அமைந்துள்ள ஜமீன் வசிப்பிடம் ( உடையார் பாளையம் அரண்மனை எனச் சொல்லி மனதில் ஏற்படுத்தியிருந்த பிரம்மாண்ட கற்பனையைத் தவிடுபொடியாக்கிவிட்டது நேரில் கண்டபின் ) பார்க்கச் சென்றோம்.





அங்கங்கே செடிகொடிகள், முட்புதர்கள் அந்த அரண்மனை சுற்றுச்சுவர்களிலும் உள்ளேயும், அரண்மனை உள்ளரங்கிலும் வளர்ந்து மிகமிக சோகமாகவும் பார்க்க இயலாதபடி அமைந்திருந்தது. சென்ற காரணத்திற்காக வேறு வழியின்றி பார்த்து வந்தோம்.

எவ்வளவோ சிறப்பாக வாழ்ந்திருந்த ஜமீன் தற்போதைய பரம்பரையினரைச் சார்ந்தவர்களை விசாரித்த போது, தங்கள் முன்னோர்களின் மதுப் பழக்கம்தான் பரம்பரை சீரழியக் காரணம் என்றனர். அந்தப்பழக்கம் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து கொண்டிருப்பதையும் உணர முடிந்தது.



அந்த அரண்மனையின் தற்போதைய நிலை குறித்து பார்வையிட வருபவர்கள் தவறாக வெளியே சொல்லிவிடுவார்கள் என அங்கே ஒரு அறிவிப்பு வைத்திருந்தனர்.




"அரண்மனை வளாகம் பழுதடைந்துள்ளதால் பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை.

மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும். இப்படிக்கு அரண்மனை நிர்வாகம், உடையார்பாளையம்

என்று இருந்தது. உண்மையில் நிர்வாகம் என்ற ஒன்று இருப்பதற்கே வாய்ப்பு இல்லாமல் இருந்தது. ஏனெனில் இப்படியான ஒரு இடத்தை நிர்வகிக்க என்ன அவசியம் இருக்கப் போகிறது. அந்த அளவு அந்த இடங்கள் இருந்தது என்பதை நேரில் பார்த்தபின் உணர முடிந்தது.

காரணம் கேட்டால் அரசாங்கத்திடம் பலமுறை முறையிட்டும் எவ்வித பலனும் இல்லை என்ற பதில் கிடைத்தது. எனவே, நன்கொடையாளர்களை எதிர்பார்த்து அந்த கோயில் புணரமைப்பு காத்திருக்கிறது என அறிய முடிந்தது.

4 மணி அளவில் புறப்பட்டு கங்கைகொண்ட சோழபுரம் சென்றோம். செல்லும் வழியில் அனைத்து பேருந்துகளிலும் வழங்கப்பட்டிருந்த கடலை பருப்பி, பொரி அனைவருக்கும் வழங்கப்பட்டது. பேருந்து பயணத்தில் செல்லும் போது கங்கை கொண்ட சோழபுரம் அருகே சென்றதும் கோபுரத்தைக் கண்டதும்

அடடா இவ்வளவு சிறப்பு மிக்க இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு இத்தனை வருடங்களாக வராமல் இருந்து விட்டோமே என்கிற மனவருத்தம் ஏற்பட்டது.

அங்கே நெடுஞ்சாலையில் 5 பேருந்துகளையும் நிறுத்தி வாசகர்களை நிறுத்திக் கொண்டிருக்கும் போது அங்கே வந்த வாகன நிறுத்த டெண்டர் எடுத்தவர்கள் வாகனத்திற்கான நிறுத்தக் கட்டணம் டோக்கன் எடுக்கச் சொன்னார்கள். எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் வாகனம் நிறுத்தப்பட்டது நெடுஞ்சாலையில்.

அவ்விடத்திற்கும் கோயிலும் 500 மீட்டர் தூரமிருக்கும். கோயிலுக்கு எதிரே உள்ள இடத்தில் வாகன நிறுத்த இடம் இருக்கிறது.

அங்கே சென்று நிறுத்தினால்தான் கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனால் நெடுஞ்சாலையில் நிறுத்தினாலே பஞ்சாயத்தில வசூலிக்கச் சொல்கிறார்கள் எனச் சொன்ன அவர்களுடன் வாக்குவாதம் செய்தும் பலனில்லை. அரசு பேருந்து என்று சொன்னாலும் பலனில்லை. வேறு

வழியின்றி வாகன நிறுத்தக்கட்டணம் செலுத்தி வந்தோம்.

உள்ளே நுழைய நுழைய, ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவ்வளவு பிரம்மாண்ட கோயில் அமைத்துள்ளனர் என்று?!! வரவேற்க நின்ற காவலர்களைப் போல இரண்டு பெரும் தூண்கள் இருபுறம். உள்ளே பரந்த புல்வெளி. சுற்றுலாப் பயணிகள் குவிந்த வண்ணம் இருந்தனர். பல்லாயிரம் பேர் வந்து கண்டுகளித்துச் சென்று கொண்டிருந்தனர்.





இவ்விடத்தில் கோயில் பற்றிய சில குறிப்புகளைத் தெரிவித்தால் நன்றாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

இந்தத் தகவல் அங்குள்ள அரசு அருங்காட்சியகத்தில் உள்ள அறிவிப்பில் பார்த்தது.

**கங்கை கொண்ட சோழீச்சுரம்**

**முதலாம் இராசேந்திர சோழன் தனது கங்கை வெற்றியின் நினைவாகக் கங்கைகொண்ட சோழபுரத்தை நிறுவி அங்கு “கங்கைகொண்ட சோழீச்சுரம்“ என்ற கோயிலை எடுப்பித்தான். இக்கோயிலை இராசேந்திர சோழன் கட்டியிருப்பினும் அவனுடைய கல்வெட்டுக்கள் ஏதும் இக்கோயிலில் இல்லை. .இராசேந்திர சோழனின் மூன்றாவது மகன் வீரராசேந்திரனது கல்வெட்டுதான் இக்கோயிலில் காணப்படும் பழமையான கல்வெட்டு. முதலாம் இராசேந்திர சோழன் தனது 23ஆவது ஆட்சியாண்டில் கொடுத்த தானங்களையும், முதலாம் .இராஜாதி ராஜன் தனது 26, 30 ஆம் ஆண்டுகளில் கொடுத்த தானங்களையும் இது குறிக்கிறது. ஆதலால் இக்கோயில் இராசேந்திர சோழனின் 23ஆவது**

**ஆட்சி ஆண்டுக்கு ( கி.பி. 1035 ) முன்னர் கட்டப்பட்டது என்பதை ஊகிக்க முடிகிறது.**

**அண்மையில் தென்னார்க்காடு மாவட்டம் எசாலம் என்ற ஊரில் கிடைத்த முதலாம் இராசேந்திர சோழனது செப்பேடு ஒன்றின் வடமொழிப்பகுதியில் முதலாம் இராசேந்திர னுக்குரிய அருஞ்செயலாகக் கங்கைகொண்ட சோழீச்சுரம் கட்டிய செயல் குறிப்பிடப் படுகின்றது. இதுவே இராசேந்திர சோழன் இக்கோயிலைக் கட்டினார் என்பதற்கான நேடிச் சான்றாகின்றது.**

கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வு நடந்தது குறித்தும் ஒரு அறிவிப்பு வெளியிட் டிருந்தனர். அதையும் படம் எடுத்துக் கொண்டேன். சில இடங்களில் சூழ்நிலை கருதி உடனடியாக காணொளியாக எடுத்ததின் காரணமாக இங்கே அவற்றை பகிர இயலாதது வருத்தமளிக்கிறது. காரணம், நிறைய தகவல்களை ஒவ்வொரு போட்டோவாக எடுத்துக் கொண்டிருந்தால் காலதாமதம் ஆகும் என்பதால் பல இடங்களில் காணொளியாகவே எடுத்துக் கொண்டேன்.

# கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வு

கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து தென் மேற்கே சுமார் 3. கி.மீ. தொலைவில் குருவாலப்பர் கோவிலிருந்து உட்கோட்டை செல்லும் வழியில் உள்ள மேட்டுப்பகுதி மாளிகைமேடு என அழைக்கப்படுகிறது.


இங்கு நடந்த அகழாய்வில் சோழர் தம் அரண்மனை அடித்தளப் பகுதிகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அடித்தள சுவர்கள் தொடர்ச்சியாக இல்லை. ஏனெனில் இப்பகுதியில் மக்கள் செங்கற்களை தோண்டியெடுத்ததினால் பெரிதும் சிதைக்கப்பட்டுவிட்டன. எனினும் கிடைத்துள்ள அடித்தளப் பகுதிகளைக் கொண்டு சோழர்களின் அரண்மனை எவ்வாறு கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை ஊகிக்க வேண்டியுள்ளது.

இங்கு கிடைத்துள்ள அடித்தளப்பகுதி சுட்ட செங்கற்களால் ஏறத்தாழ 14 வரிசைகளில் அடுக்கப்பட்டு முறையாகக் கட்டப்பட்டுள்ளது. அகழாய்வுக் குழியின் வடகிழக்குத் திசையில் உள்ள ஒரு சுவரின் இரு புறங்களிலும் பெருக்கல் குறியீடுகள் காணப்படுகின்றன.

அளவுகளைக் குறியிட்டுக் கொண்டு கட்டடச் சுவர் எடுக்கும் முறை அக்காலத்தில் நடைமுறையில் இருந்தது இதன் மூலம் உணரமுடிகிறது.




மாளிகைமேட்டுப் பகுதியில் தொடர்ந்து பலமுறை அகழாய்வு மேற்கொள்ளப்பட்டன. தோண்டப்பட்ட ஆறு அகழாய்வு குழிகளிலும் இயற்கை மண் 3.50 மீட்டர் ஆழத்தில் தென்பட்டது. ஒரு குழியில் மட்டும் மூன்று வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த கட்டடப் பணி நடைபெற்றிருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். தூண்களை நிறுத்து வதற்கான பெரிய கற்பீடங்கள் பல கிடைத்தன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.


ஒரு பாத்திரத்தில் பிரசாதம் இருந்து பலருக்கும் வழங்கிக் கொண்டிருந்தால், வேமாக தீர்ந்து போவதற்குள் சென்று வாங்க வேண்டும் என்று நினைப்போமே அப்படி, இவ்வளவு சிறப்பான பிரம்மாண்ட கோயில் அமைப்பை அழகினை வேறு யாரும் தங்கள் கண்களால் கவர்ந்து செல்வதற்குள் நாம் சென்று பார்த்துவிட வேண்டும் என்கிற ஆர்வத்துடன் வேகமாக உள்ளே சென்றோம்.

5 பேருந்து என்றாலும் 300 பேரும் ஒன்றாகச் செல்லாமல் அவரவர் தங்களுக்குள் ஏற்பட்ட நட்புகளின் அடிப்படையில் பழக்க வழக்கத்தின் அடிப்படையில் தங்களுக்கான குழுவினருடன் சென்றனர்.

இருந்தாலும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஆலோசனைப்படி குறிப்பிட்ட இடத்தில் அனைவரும் ஒன்றுசேர்ந்து விடுவார்கள். அப்போது அவர்களுக்கு அடுத்த செயல்பாடுகள் குறித்த ஆலோசனைகள் வழங்கப்படும்.

அப்படியே இரண்டு மணிநேரம் பார்வையிட நேரம் ஒதுக்கப்பட்டிருந்து. உள்ளே சென்று ஆவுடையார் பெருமானை தரிசிக்க கூட்டம் அலைமோதியது. இருந்தும் காத்திருந்து வழிபட்டு வெளியே வந்த கூட்டம் பல்வேறு இடங்களுக்கும் சென்று ரசித்ததோடு அங்கங்கே தங்கள் அலைபேசியில் நினைவுகளுக்காக புகைப்படம் எடுத்துப் பதிவிட்டு மகிழ்ந்தனர்.

அந்த பிரம்மாண்ட நந்தி, தங்கநிற கொடிக்கம்பம், அருகே அமைந்து மண்டபங்கள், கோயில் மாடத்திற்குச் செல்லும் படிக்கட்டு வழியாக மேல்மண்டபத்திற்கு சிலர் சென்று பார்த்தனர். அந்த மாபெரும் கோயிலை நின்று ரசித்த சிலர் எப்படி அந்தக் காலத்தில் இப்படி ஒரு பிரம்மாண்ட படைப்பை உருவாக்கியிருக்க முடியும் என சிலாகித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

உடன் நின்று கொண்டிருந்த திரைப்பட இயக்குநர், குறும்பட தயாரிப்பாளர், பாடகர், கவிஞர். து.ஜோ. பிரபாகர் அவர்கள் அந்த பிரம்மாண்ட கோயில் படைப்பினைக் கண்டு ஆச்சரியத்தில் இருந்து மீள இயலாமல் தவித்ததை உணர முடிந்தது.

இந்த பிரம்மாண்டம் குறித்து அந்தக் காலத்தில் இப்படி ஒரு படைப்பை உருவாக்கும் வகையில் அன்றைய மனிதன் எவ்வளவு திறமை வாய்ந்தவான, வலிமை மிகுந்தவான இருந்திருப்பான் என அவர் சொன்னபோதுதான் எனக்கும் அன்றைய தலைமுறையின் வலிமை புரிந்தது. கோயிலைச் சுற்றி வரவர பிரமிப்பு அதிகமாகிக் கொண்டே இருந்தது. பின்னர் சற்று அசதி தீர அங்குள்ள பரந்த புல்வெளியில் அமர்ந்து வானுயர்ந்த அந்த கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கோபுரத்தை ரசித்துக் கொண்டிருந்தோம்.

நேரம் போனதே தெரியவில்லை. அதை உணர்த்தும் விதமாக சற்றே மழைத்தூரல் வந்து ஞாபகப்படுத்தியது.

பின்னர் வெளியே வரவர அருகே அமைந்துள்ள கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியம் குறித்து தகவல் தெரிந்ததும், பார்வை நேரம் முடிவதற்குள் சென்று பார்த்துவிட வேண்டும் என்கிற ஆர்வத்தில் ஓடினோம். கடைசி நேர பார்வையாளர்களாக ( நபர் ஒன்றுக்கு நுழைவுக் கட்டணம் 5ரூ மட்டும், பிரதி வெள்ளி மட்டும் விடுமுறை ) உள்ளே சென்று பார்வையிட்டோம்.

அங்கே உள்ளே நுழையும்போது வரவேற்ற அரசு அறிவிப்பு பலகையில்

**இராசேந்திரசோழன் வரலாற்று அகழ்வைப்பகம், கங்கைகொண்ட சோழபுரம், பெரம்பலூர் மாவட்டம்**

**மாளிகைமேடு அகழாய்வில் கிடைத்த முதலாம் இராசேந்திர சோழனின் ( கி.பி. 1012 - 1044 ) அரண்மனை அடித்தளப்பகுதி, அங்கு கிடைத்த தொல்பொருட்கள் மற்றும் இம்மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட சோழர் கால கற்சிலைகள் அகழ்வைப்பகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.**


என்று தெரிவித்திருந்தது.

அங்கேயும் உள்ளே பார்வையிடும்போதும் ஆச்சரியத்தில் கண்கள் அகல விரிந்தபடியேதான் இருந்தது. கண்ணிமைக்கக்கூட இயலாதபடி அப்படி ஒரு கலையம்சங்களை அந்தக் காலத்தது நமது முன்னோர்கள் படைத்து, உருவாக்கி, பயன்படுத்தி வாழ்ந்தனர் எனும் போது உடன் மனதிற்குள் பெருமையும் பூரிப்பும் ஏற்பட்டது என்பதை உணராமல் இல்லை.





சோழர்கால அரண்மனையின் அடித்தளம் மாளிகைமேடு அகழாய்வு
Basement of Chola Palace (Excavation at Maligaimedu)




சோழர்கால ஒவியங்கள், அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள், உணவு தயாரிக்கப் பயன்படுத்திய பாத்திரங்கள், வழிபட்ட கடவுள்கள், பூசை பொருட்கள், கால்நடை வகைகள், அழகர் கோயில் 80 அடி உயரக் கதைச் சிற்பம் என ……

அடடா…எத்தனை எத்தனை அழகாய்வுப் பொருட்கள் பாதுகாப்பாக அரசாங்கம் வைத்து அடுத்த தலைமுறையினருக்கு தெரிவிக்கும் பணி செய்கிறது என்பதை அறிந்து பாராட்டத் தோன்றுகிறது.

பின்னர் அனைவரும் தேநீர் இடைவேளைக்குப் பிறகு பேருந்து பயணம் 7 மணி அளவில் புறப்பட்டது. 5 பேருந்துகளிலும் வந்திருந்த வாசகர்களிடம் டாப்லைட் நூலகத்தில் மாதந் தோறும் நடைபெறும் படிப்போம் பகிர்வோம்

அமர்வு குறித்து ( இதுவரை அறியாதவர் களுக்கான ) விளக்கம் தரப்பட்டு, கங்கை கொண்ட சோழபுரம் புல்வெளியில் ஒரு அமர்வு நடை பெற்றது. மேலும் அந்தந்தப் பேருந்துகளில் பயணம் செல்பவர்கள் பயண நேரத்தை பயன் படுத்தும் விதமாக தங்கள் பேருந்தில் தனித்தனியாக படிப்போம் பகிர்வோம் அமர்வினை மேற்கொண்டனர். அவரவர்கள் தங்கள் அனுபவங் களை பகிர்ந்து கொண்டனர்.

இரவு 9.30 மணி அளவில் திருச்சி நகரை வந்தடைந்தோம். அங்கே இரவு உணவு முடித்து விட்டு புறப்பட்டோம். 12 மணி அளவில் காங்கயத்திற்கும் முன்பாக தேநீர் இடை வேளையில் தேவைப்படுவோர் பேருந்திலிருந்து வெளியே வந்து சற்று இளைப்பாறினர். பிறகு அனைத்து பேருந்துகளும் புறப்பட்டு சில நிமிட இடைவெளிகளில் நள்ளிரவு 1.30 மணி அளவில் டாப்லைட் நிறுவனத்திலும் நாச்சிமுத்து நினைவு நூலகத்தையும் வந்தடைந்தனர். அனைவரும் பாதுகாப்பாக வந்தடைந்ததை மகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்து வாசகர்களின் சார்பாக டாப்லைட் நிறுவனத்தினருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

அனைவருக்கும் டாப்லைட் நிறுவனத்தின் சார்பாக வருடாந்திர காலண்டர் வழங்கப்பட்டது. அனைவரும் பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டு பிரியா விடைபெற்றனர். வருகை தந்து சிறப்பித்த வாசகர்களுக்கு நாச்சிமுத்து நினைவு நூலக பொறுப்பாளர் திருமதி. இந்துமதி நன்றி தெரிவித்தார்.

மாதந்தோறும் நடைபெறும் டாப்லைட் நாச்சிமுத்து நினைவு நூலகத்தின் “படிப்போம் - பகிர்வோம்“ அமர்வு டிசம்பர் 2024 இல் ஒருவெற்றிகரமான தொல்லியல் வரலாற்று அகழாய்வு இடமான கங்கைகொண்ட சோழபுரம் பயணத்துடன் நிறைவு பெற்றது.

நன்றி - அன்புடன் -கவிஞர். எஸ்ஏ. முத்துபாரதி FB: Muthu Baarathi YouTube : Muthu mama

